# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 192 | வியாழக்கிழமை Thursday | 08.10.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# “2047க்குள் வளர்ந்த இந்தியாவை நிச்சயம் உருவாக்குவோம்”



## பிரதமர் நரேந்திர மோடி உறுதி

புதுடெல்லி: 2047-க்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றுவது உள்பட நமது இலக்குகள் அனைத்தையும் நாம் நிச்சயம் நிறைவேற்றுவோம் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கடந்த 2001ம் ஆண்டின் இதே நாளில் (அக்டோபர் 7) குஜராத்தின் முதல்வராக முதன்முறையாக பொறுப்பேற்றார் நரேந்திர மோடி. மூன்று முறை முதல்வராக பதவி வகித்த அவர், பின்னர் நாட்டின் பிரதமராக பதவி வகித்து வருகிறார். அரசு தலைமைப் பொறுப்பில் 25 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளதை முன்னிட்டு டெல்லியில் நடைபெற்ற வளர்ந்த இந்தியாவுக்கான சங்கல்ப சபா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பிரதமர் மோடி உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது: வாக்கு அரசியல் காரணமாக சமூகம் பிளவுபட்டிருப்பது நாடு எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால்களில் ஒன்று. ஒரு விவசாயியின் வயலில் தண்ணீர் இல்லாவிட்டால், அது ஒரு குறிப்பிட்ட சாதியை மட்டும் பாதிக்குமா? மின்சாரம் இல்லாவிட்டால், அது ஒரு குறிப்பிட்ட சமூகத்தை மட்டும் பாதிக்குமா? இல்லை என்பதே இதற்கான பதில். பிரச்சினை அனைவருக்குமானது எனும்போது, அதற்கான தீர்வும் அனைவருக்குமானதாகவே இருக்க வேண்டும். நூறு ஆண்டுகளுக்கு முன்பு நாம் 40 கோடிக்கும் குறைவாக இருந்தோம். இன்று 140 கோடிக்கும் அதிகமாக இருக்கிறோம் 140 கோடி மக்களும் இணைந்து 2047-க்குள் வளர்ந்த இந்தியாவை உருவாக்குவோம். நிச்சயமாக நாம் அதைச் செய்வோம். உலகின் முதல் 3 பொருளாதாரங்களில் ஒன்றாக நாம் உருவெடுப்போம். நிச்சயமாக நாம் அதைச் செய்வோம். உலகளாவிய உற்பத்தி மையாக இந்தியாவை மாற்றுவோம். நிச்சயமாக நாம் அதைச் செய்வோம். ஒலிம்பிக் போட்டியை நடத்துவோம். நிச்சயமாக நாம் அதைச் செய்வோம். விண்வெளிப் பயணத்தை மேற்கொள்வோம். நிச்சயமாக நாம் அதைச் செய்வோம். இந்த ஆற்றல், இந்த உற்சாகம், இந்த நம்பிக்கை அசாதாரணமானவை.

இஸ்ரேல் சென்ற விமானத்தை விபத்துக்குள்ளாக்க ஃபிளை துபாய் விமானத்தின் துணை விமானி முயன்றபோது, தான் கத்தியால் குத்தப்பட்ட நிலையிலும் அந்த சதியை முறியடித்த இந்திய விமானி ஸ்மித் மச்சார் குறித்தே இன்று உலகம் பேசுகிறது. எதிர்காலத்தில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட விமானங்களைப் பற்றியும் உலகம் பேசும் ஒரு நாள் வரும்.

தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய கொள்கைகள் மற்றும் இடைவிடாத கடின உழைப்பின் மூலம் இந்த இலக்குகள் அடையப்படும். இந்தியா சவால்களை எதிர்கொள்ள நேரிடலாம். ஆனால், நம்மிடம் 140 கோடி தீர்வுகள் உள்ளன.

என் மீது நம்பிக்கை வைத்திருக்கும் நாட்டு மக்கள் முன் நான் தலைவணங்குகிறேன். என்னைப் பொறுத்தவரை மக்களே கடவுள். கடினமாக உழைக்கும் பாஜக தொண்டர்களே எனது பலம். பாஜக மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணியைச் சேர்ந்த சக ஊழியர்களுக்கும், ஜனநாயகத்தின் மீது மிகுந்த மரியாதை கொண்ட அனைவருக்கும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு பிரதமர் மோடி உரையாற்றினார்.

# பெரம்பூர் எம்.எல்.ஏ. அலுவலகத்தில் முதலமைச்சர் விஜய் ஆய்வு



## மக்களின் குறைகளை கேட்டறிந்தார்

சென்னை:

தனது சொந்த தொகுதியான பெரம்பூருக்குச் சென்ற முதலமைச்சர் விஜய் தொகுதி மக்களின் குறைகளைக் கேட்டறிந்து மனுக்களை பெற்றுக்கொண்டார். பெரம்பூர் எம்.எல்.ஏவாக வெற்றி பெற்ற பிறகு இரண்டாவது முறையாக தனது சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்குச் சென்றுள்ளார் விஜய்.

சட்டமன்றத் தேர்தலில் பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய இரண்டு தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்ற விஜய், பின்னர் திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ பதவியை ராஜினாமா செய்து, பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகத் தொடர்ந்து வருகிறார்.

சென்னை வியாசர்பாடி, சர்மா நகர் முதலாவது தெருவில் ஏற்கனவே செயல்பட்டு வந்த கட்டடம், தற்போதைய நவீனத் தொழில்நுட்ப வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டு புதிய எம்.எல்.ஏ அலுவலகமாக மாற்றப்பட்டுள்ளது. விஜய்யின் எம்.எல்.ஏ அலுவலகம் மஞ்சள் நிறத்தில் வர்ணம் பூசப்பட்டு பளிச்சென அமைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் கோரிக்கைகளைத் தினசரி கேட்டு நடவடிக்கை எடுப்பதற்காக 10 பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, கணினி வசதிகளுடன் தனிப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தை கடந்த ஜூலை மாதம் விஜய் திறந்து வைத்திருந்தார்.

இந்நிலையில் சென்னை மாதவரத்தில் உள்ள ஆவின் பால் பண்ணையில் முதல்வர் ஜோசப் விஜய் இன்று காலை ஆய்வு செய்தார். அப்போது, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில் ரூ. 2.23 கோடியில் கட்டப்பட்ட மாநில ஆய்வக துணைக் கட்டடத்தையும் முதல்வர் விஜய் இன்று திறந்து வைத்தார். அங்கு ரூ. 152 கோடியில் புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டடத்தையும் பார்வையிட்டார்.

இதையடுத்து முதல்வர் விஜய் தனது சொந்த தொகுதியான பெரம்பூர் தொகுதிக்குச் சென்றார். பெரம்பூர் எம்எல்ஏ அலுவலகத்துக்குச் சென்ற அவர், அங்கு காத்திருந்த மக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றார். மேலும் இ-சேவை மூலமாக விண்ணப்பித்த மக்களுக்கு பல்வேறு சான்றிதழ்களையும் வழங்கினார்.

# போக்சோ வழக்கு விசாரணை: சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட ஜெம் வீரமணி



சென்னை: சிறுமிகளை வன்கொடுமை செய்த புகாரில் கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கும் ஜெம் வீரமணி சென்னை போக்சோ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

சிறுமிகளை வன்கொடுமை செய்ததாக தொடரப்பட்ட வழக்கில் கடந்த ஆகஸ்ட் 29-ஆம் தேதி ஜெம் கிரானைட்ஸ் உரிமையாளர் வீரமணி மற்றும் அவருக்கு உடந்தையாக இருந்த சாந்தி, அவரது கணவர் மகேந்திர சிம்ஹம் மற்றும் கணேசன் ஆகியோரை காவல்துறையினர் கைது செய்தனர்.

தமிழ்நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய ஜெம் வீரமணி மீதான போக்சோ வழக்கை விசாரிப்பதற்கு பெண் அதிகாரிகள் அடங்கிய சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டு தற்போது விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. ஜெம் வீரமணியால் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளானவர்கள் எஸ்ஐடி போலீசாரிடம் தொடர்ந்து புகார் அளித்து வரும் நிலையில், வீரமணி மீது இதுவரை 5 போக்சோ வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், ஜெம் வீரமணி இன்று சென்னை போக்சோ நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்படுத்தப்பட்டார். இதனால் நீதிமன்றத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt


# ரெப்போ வட்டி விகிதம் 5.50 சதவீதமாக உயர்வு

## வீடு, வாகனக் கடன் வட்டி அதிகரிக்க வாய்ப்பு

வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் குறுகிய கால கடன்களுக்கான வட்டி விகிதம் ரெப்போ ரேட் என்று அழைக்கப்படுகிறது. இதன் அடிப்படையில்தான் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் வீடு, வாகன கடன்களுக்கான வட்டியை வங்கிகள் தீர்மானிக்கின்றன. 2 மாதங்களுக்கு ஒருதடவை ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கை குழு கூடி, ரெப்போ ரேட்டை மாற்றியமைப்பது பற்றி ஆலோசனை நடத்துவது



வழக்கம். அதுபோல், இம்முறைக்கான இக்கூட்டம் இன்று மும்பையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் ரெப்போ ரேட் விகிதத்தை உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்போதைய ரெப்போ ரேட் விகிதம் 5.25 சதவீதத்தில் இருந்து 5.50 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் ரெப்போ வட்டி விகிதம் உயர்த்தப்படுவது இதுவே முதல் முறையாகும். மேற்கு ஆசிய பதற்றம் காரணமாக பணவீக்கம் அதிகரித்து வருகிறது. கச்சா எண்ணெய் விலை உயர்ந்து வருகிறது. பருவமழையும் நிச்சயமற்ற நிலையில் இருக்கிறது. இத்தகைய சூழலில் ரிசர்வ் வங்கி ரெப்போ ரேட் விகிதத்தை உயர்த்தியுள்ளது. ரெப்போ வட்டி உயர்வு முடிவைத் தொடர்ந்து, மாறுபடும் வட்டி விகிதத்தில் வீட்டுக் கடன் பெற்றவர்களின் கடன் வட்டி விகிதத்தை சம்பந்தப்பட்ட வங்கிகள் உயர்த்தினால், அதன் தாக்கத்தை அவர்கள் எதிர்கொள்ள நேரிடும்.

வங்கிகள் இந்த வட்டி உயர்வை வெவ்வேறு வகைகளில் வாடிக்கையாளர்களுக்கு மாற்றக் கூடும். சிலருக்கு மாதாந்திர தவணை அதிகரிக்கலாம். மற்றவர்களுக்கு இ.எம்.ஐ தொகையில் மாற்றம் இல்லாமல், கடனை திருப்பிச் செலுத்தும் காலம் நீட்டிக்கப்படலாம். இதன் உண்மையான தாக்கம், எந்த வங்கியில் கடன் பெற்றுள்ளனர், கடனின் வகை, தற்போது செலுத்தும் வட்டி விகிதம் மற்றும் மீதமுள்ள கடன் காலம் ஆகியவற்றைப் பொறுத்து மாறுபடும். வீடு வாங்க திட்டமிடுபவர்களுக்கும் கடன் செலவு அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, உத்தரவுப்படி மாவட்டத்தில் உணவு பாதுகாப்பு மற்றும் நியமன அலுவலர் அவர்களின் தலைமையிலான குழுவினர்கள் டீ கடைகள் மற்றும் பேக்கரியில் உரிமையாளர்கள் விற்பனைக்கு வழங்க தயாரிக்கப்படும் உணவுப் பொருட்களின் தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

### தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில்

# மாணவர்களுக்கு எண்ணும், எழுத்தும் பயிற்சி கையேடுகள் வழங்கல்



தேவகோட்டை: சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப்பள்ளியில், நான்காம் மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு இரண்டாம் பருவத்திற்கான "எண்ணும், எழுத்தும்" பயிற்சி கையேடுகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் தேவகோட்டை வட்டார வளமைய மேற்பார்வையாளர் கார்த்திகேயன், பள்ளித் தலைமை ஆசிரியர் லெ.சொக்கலிங்கம் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பயிற்சி கையேடுகளை வழங்கினர். மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தவும், வகுப்பறைக் கற்றலை எளிமையாகவும் பயனுள்ளதாகவும் மாற்றவும் இப்பயிற்சி கையேடுகள் உதவும் என தெரிவிக்கப்பட்டது.

மாணவர்கள் ஆர்வத்துடன் கையேடுகளைப் பெற்றுக்கொண்டு, அவற்றை முறையாகப் பயன்படுத்தி கற்றல் திறனை மேம்படுத்த உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

# திட்டக்குடியில் பட்டை நாமத்துடன் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்



கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், புலிவலம் கிராமத்தில் வசிக்கும் இந்து ஆதிதிராவிடர், மலைக்குறவர் மற்றும் சலவைத் தொழிலாளர் குடும்பங்களுக்கு, அவர்கள் குடியிருக்கும் இடத்துக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வலியுறுத்தி, தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் சார்பில் விவசாயிகள் திட்டக்குடி வட்டாட்சியர் அலுவலகம் முன் பட்டை நாமத்துடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். புலிவலம் கிராம மக்கள் இலவச வீட்டுமனைப் பட்டா கோரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்ததுடன், கிராம நிர்வாக அலுவலர் விசாரணையும் மேற்கொண்டுள்ளார். இருப்பினும், இதுவரை பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஒரே வீட்டில் இரண்டு, மூன்று குடும்பங்கள் வசித்து வரும் நிலையில், தகுதியுள்ள குடும்பங்களுக்கு அவர்கள் குடியிருக்கும் இடத்துக்கு உடனடியாக இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. போராட்டத்துக்கு மாவட்டக் குழு உறுப்பினர் பி. கே. சின்னதுரை தலைமை வகித்தார். செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, துணைச் செயலாளர் பூமாலை, பொருளாளர் கொளஞ்சி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிபிஐ மாவட்ட துணைச் செயலாளர் சுப்பிரமணியன், விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டச் செயலாளர் முருகையன், சிபிஐ மங்களூர் ஒன்றியச் செயலாளர் நிதி உலகநாதன், மாவட்டக் குழு உறுப்பினர் தேவா, மாதர் சங்க மாவட்டத்தலைவர் அம்பிகா, நகரச் செயலாளர் செல்வராசு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### திட்டக்குடி அருகே

# மின்னல் தாக்கி உயிரிழந்த கொளஞ்சியின் உடலுக்கு சி.வெ.கணேசன் நேரில் அஞ்சலி



திட்டக்குடி: கடலூர் மாவட்டம், திட்டக்குடி அருகேதி.இளமங்கலம் பகுதியைச் சேர்ந்த கொளஞ்சி என்பவர் நேற்று முன்தினம் அக்டோபர் 6 ஆம் தேதி வயல் வெளிக்குச் சென்றிருந்தபோது, வேப்பமரத்தடியில் நின்ற நிலையில் திடீரென மின்னல் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதையடுத்து, அவரது உடல் திட்டக்குடி அரசு மருத்துவமனை பிரேதக் கிடங்கில் வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், முன்னாள் அமைச்சர் மற்றும் திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினர் சி. வெ.கணேசன் மருத்துவமனைக்கு நேரில் சென்று, கொளஞ்சியின் உடலுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து, கொளஞ்சியின் மனைவி மற்றும் உறவினர்களை சந்தித்து ஆறுதல் தெரிவித்த சி.வெ.கணேசன், அவர்களுக்கு நிதியுதவியும் வழங்கினார்.

கொளஞ்சியின் உடலைக் கண்டு அவரது உறவினர்கள் கதறி அழுதது அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியது. மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே சோகத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

### போதை இல்லாத சமூகத்தை உருவாக்குவோம்:

# தூத்துக்குடியில் மரக்கன்று நடுதல், மாணவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்திய வேலூர் இப்ராஹிம் விழிப்புணர்வு பிரசாரம்




தூத்துக்குடியில் பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாளை முன்னிட்டு, 'போதையில்லா பாரத்தை உருவாக்குவோம்' என்ற விழிப்புணர்வு திட்டத்தின் கீழ் தூத்துக்குடியில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் பாஜக சிறுபான்மை அணி தேசிய செயலாளர் வேலூர் இப்ராஹிம் பங்கேற்று பொதுமக்கள் மற்றும் மாணவர்களிடம் போதைப்பொருள் தடுப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

முதற்கட்டமாக தூத்துக்குடி டி.எம்.பி காலனி பகுதியில் நடைபெற்ற மரக்கன்று நடும் நிகழ்ச்சியில் வேலூர் இப்ராஹிம் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டார். அப்போது சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம் மற்றும் போதைப்பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து எடுத்துரைத்தார்.

இதனைத் தொடர்ந்து தெற்கு காட்டன் சாலையில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு சென்ற அவர், அங்கிருந்த குழந்தைகளுடன் பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாளை கொண்டாடினார். குழந்தைகளுக்கு பழங்கள் மற்றும் கல்வி உபகரணங்களை வழங்கினார்.

பின்னர் திருச்செந்தூர் சாலையில் உள்ள காமராஜர் கல்லூரிக்கு சென்ற வேலூர் இப்ராஹிம், மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடினார். போதைப்பொருட்களால் ஏற்படும் பாதிப்புகள், மாணவர்கள் போதைப்பழக்கத்திற்கு அடிமையாகாமல் தடுப்பது மற்றும் போதை இல்லாத சமுதாயத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் குறித்து மாணவர்களுடன் கருத்துகளை பகிர்ந்து கொண்டார்.

தொடர்ந்து தூத்துக்குடி தெற்கு மற்றும் வடக்கு ரத வீதிகள் சந்திக்கும் சிவன் கோவில் தேரடி பகுதியில், 'போதையில்லா பாரத்தை உருவாக்குவோம்' என்ற விழிப்புணர்வு பிரசாரத்தில் பங்கேற்று பொதுமக்களிடம் போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

நிகழ்ச்சிகளில் தூத்துக்குடி தெற்கு மாவட்ட பாஜக தலைவர் சித்ராங்கதன், தெற்கு மாவட்ட பாஜக பொதுச் செயலாளர் ஏ.எம். ராஜேஷ், மாவட்ட துணைத் தலைவர்கள் சண்முகசுந்தரம், மசானம், சிவராமன், சிறுபான்மை அணி மாவட்டதலைவர் கலைச்செல்வன் உள்ளிட்ட பல்வேறு அணி மற்றும் பிரிவு நிர்வாகிகள், கட்சி தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாள் நிகழ்ச்சிகளை முன்னிட்டு, மரக்கன்று நடுதல், குழந்தைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் மற்றும் போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு உள்ளிட்ட சமூக நலன் சார்ந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

# தூத்துக்குடியில், தனியார் ஆம்னி பேருந்து ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து நடுரோட்டில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது பயணிகள் அதிர்ஷ்டவசமாக காயமின்றி உயிர் தப்பிய பயணிகள்



கோயம்புத்தூரிலிருந்து திருச்செந்தூருக்கு இன்று காலை தனியார் ஆம்னி பேருந்து ஒன்று வந்துகொண்டிருந்தது. இப்பேருந்தில் 6 பயணிகள் பயணித்தனர். கோயம்புத்தூரைச் சேர்ந்த ராமச்சந்திரன் (30) என்பவர் பேருந்தை ஓட்டி வந்தார். இப்பேருந்து இன்று காலை தூத்துக்குடி எட்டயபுரம் ரோடு, சங்கரப்பேரி விலக்கு சாலை அருகே வந்து கொண்டிருந்தபோது, எதிர்பாராதவிதமாக ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து நடுரோட்டில் தலைகீழாகக் கவிழ்ந்தது.

இவ்விபத்தில் பேருந்தில் இருந்த பயணிகள் 6 பேருக்கும் எவ்வித காயமும் ஏற்படாமல் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். பின்னர் அவர்கள் அனைவரும் மாற்றுப் பேருந்து மூலம் திருச்செந்தூருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இச்சம்பவம் குறித்துத் தகவலறிந்த சிப்காட் காவல் நிலைய போலீஸார் உடனடியாகச் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர்.

நடுரோட்டில் கவிழ்ந்துகிடந்த பேருந்தைக் கிரேன் மூலம் தூக்கி அப்புறப்படுத்தினர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இவ்விபத்து தொடர்பாகச் சிப்காட் காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பெண்ணாடத்தில் காணாமல் போன பெண் தூக்கிட்டு சடலமாக மீட்பு



கடலூர் மாவட்டம், பெண்ணாடம் மேட்டுத்தெரு சிலுப்பனூர் சாலை அருகே உள்ள வாய்க்கால் முள் புதரில் மரத்தில் தூக்கிட்டு இறந்த நிலையில் பெண் ஒருவர் நேற்று அக்டோபர் 7 புதன்கிழமை சடலமாக மீட்கப்பட்டார். பெண்ணாடம் புத்தர் தெருவைச் சேர்ந்த முத்துசாமியின் மகள் கருப்பாயி (50) என்பவர் இறந்தவர் ஆவார்.

திருமணம் ஆகாத கருப்பாயி, தனது அக்கா யசோதையின் வீட்டில் தங்கி வசித்து வந்துள்ளார். கடந்த செப்டம்பர் 28-ஆம் தேதி வாக்கிங் செல்வதாகக் கூறிவிட்டு சென்ற அவர் வீடு திரும்பவில்லை. இதையடுத்து, அவரை காணவில்லை என அவரது குடும்பத்தினர் அக்டோபர் 1-ஆம் தேதி பெண்ணாடம் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். அதன் பேரில், பெண்கள் காணாமல் போனது தொடர்பாக வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், மேட்டுத்தெரு சிலுப்பனூர் சாலை அருகே உள்ள வாய்க்கால் முள் புதரில் மரத்தில் நைலான் கயிற்றால் தூக்கிட்டு இறந்த நிலையில் கருப்பாயி சடலமாக கிடந்தது தெரியவந்தது. இதுகுறித்து தகவலறிந்த பெண்ணாடம் காவல் நிலைய போலீஸார் சம்பவ இடத்துக்கு சென்று சடலத்தை மீட்டு, சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், காணாமல் போனதாக ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட வழக்கின் அடிப்படையிலும் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தர்மபுரியில் ஜாதிய வண்முறை; மேற்கு மண்டல காவல்துறை தலைவரிடம் பாதிக்கபட்டவர் மனு



தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் அடுத்த நாகதசாம்பட்டியை சேர்ந்தவர் 41 வயதான பிரகாஷ். இவர் இன்று கோவை பந்தயசாலையில் உள்ள மேற்கு மண்டல காவல்துறை தலைவர் ஐஜி ரம்யா பாரதியை சந்தித்து பரபரப்பு மனு ஒன்றை அளித்தார். முன்னதாக செய்தியாளர்களை சந்தித்து பேசிய பிரகாஷ் கூறியதாவது..

எங்களது ஊர் கவுண்டர் என்றழைக்கப்படும் நஞ்சப்பன் என்பவரது மகன் ராஜா என்கின்ற செல்வகுமார் அதிமுக கட்சியில் இருந்து வருகின்றார். இந்த நிலையில் கடந்த 2010ம் ஆண்டு, எங்களது வீட்டு சுவற்றில் கட்சி விளம்பர படம் எழுத என்னிடம் கேட்டார். ஆனால் நான் மறுப்பு தெரிவித்து விட்டேன். அன்று ஆரம்பித்த பிரச்சனை, இன்று வரை நீள்கிறது. தற்போது அதே ஊரை சேர்ந்த நஞ்சப்பன் என்பவரது மகன் ராஜா என்கிற செல்வகுமார், மற்றும் எல்லப்பன் என்பவரது மகன், திமுகவை சேர்ந்த ராஜி ஆகிய இருவரும் சேர்ந்து கொண்டு கடந்த 28.07.2026ம் தேதி, எங்களது வீட்டின் அருகே வந்து ஜாதிய ரீதியாக எங்களது குடும்பத்தை பற்றி அசிங்கம் அசிங்கமாக பேசி, திட்டி வீட்டு வாசலில் அசிங்கம் செய்து காரி உமிழுந்தனர். இதனை கேட்டதற்காக, எங்களை திட்டி ஜேசிபி கொண்டு எங்களது வீட்டு திண்ணை மற்றும் படிக்கட்டுகளை இடித்து விட்டனர். இது சம்பந்தமாக பாப்பாரப்பட்டி காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். புகாரின் பேரில் எஸ்.இ/எஸ்.இ பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தனர். ஆனால் யாரையும் கைது செய்யவில்லை. இதனால் அவர்கள் தினமும் என்னையும், எனக்குடும்பத்தினரையும் புகார் செய்ததால், ஜாதியின் பெயரை சொல்லி மிரட்டுவதுடன், குடும்பத்தோடு கொலை செய்து விடுவதாகவும் மிரட்டி வருகின்றனர். மேலும் ஊர் பொது சாலையில் நாங்கள் நடக்க கூடாது என தெரிவித்து வருவதுடன் எங்களது வீட்டுமுன்பாக காரி துப்பி எங்களை அசிங்கபடுத்துகின்றனர். இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர், நான் அளித்திருந்த புகாரையும், சமரசம் செய்து தள்ளுபடி செய்து விட்டதாக காவல்துறையினர் தெரிவித்து வருகின்றனர். புகார் அளித்த என்னிடம் எந்த வித விசாரணையும் நடத்தாமல், குற்றவாளிகளுக்கு, ஆதரவாக காவர்துறையினர் செயல்பட்டுள்ளனர். எனவே இந்த வழக்கை உரிய விசாரணை நடத்தி, தாழ்த்தப்பட்ட தனக்கும், தனது குடும்பத்தினருக்கும் நீதி கிடைக்கவழிவகைசெய்ய வேண்டும் என்று தெரிவித்தார்.

## கோவையை சேர்ந்த பெண்ணுக்கு நேர்ந்த கதி தமிழக முதல்வர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதிக்கபட்ட பெண் கண்ணீருடன் புகார்



கோவையைச் சேர்ந்த புவனேஸ்வரி என்பவரை பழனியை சேர்ந்த கார்த்திகேயன் என்பவர் கடந்த 2011ம் ஆண்டு திருமணம் செய்தார். அப்போது என்பதரை பவுன் தங்க நகைகளையும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீட்டு உபயோகப் பொருட்களையும் வரதட்சணையாக வாங்கிக் கொண்டார். சாப்ட்வேர் கம்பெனியில் வேலை செய்த புவனேஸ்வரியை பெண் வீட்டில் அடிமையாக தான் இருக்க வேண்டும் வேலைக்கு போகக்கூடாது என்று சொல்லி வேலையை விட்டு நிறுத்தினார். தொடர்ந்து வன்கொடுமைகள் செய்து வந்தார். குழந்தை கல்வி சான்றிதழ்களை ஜெராக்ஸ் எடுத்து வர சொன்னதற்காக காதில் அடித்து புவனேஸ்வரியின் காதில் ஜவ்வு கிழிந்து இப்பொழுதுகாதுகேட்கவில்லை. கார்த்திகேயன் கொடுமைகளுக்கு எல்லாம் அவர் பெற்றோர்களும் உறவினர்களும் உடந்தையாக இருந்து வந்துள்ளனர். இனிமேலும் அங்கிருந்தால் உயிருக்கு ஆபத்து என்று புவனேஸ்வரி பெற்றோர் வீட்டுக்கு வந்த நிலையில், கார்த்திகேயன் அவருடைய தாயார் சாரதா கார்த்திகேயன் நண்பர் குமரவேல் ஹக்கீம்,கார்த்திக்கின் உறவினர் மீராசு, கார்த்திக்கின் கள்ளக்காதலி ரேணுகா, ஆகியோர்கள் சதி திட்டம் தீட்டி புவனேஸ்வரி பெற்றோரிடம் நிலங்கள் பணம் உள்ளது. புவனேஸ்வரியின் பெயரில் சாப்ட்வேர் கம்பெனி, நிலங்கள் வாங்குவதாக நம்பிக்கை வார்த்தைகள் கூறி புவனேஸ்வரியின் பெற்றோர்களையும் சகோதரர்களையும் நம்ப வைத்து பணம் வாங்கிக் கொண்டு அதன்பின்பு துரத்தி விட்டு விடலாம் என்று சதித்திட்டம் தீட்டி அதை நிறைவேற்றுவதற்காக கோவையில் மேற்கண்ட அனைவரும் புவனேஸ்வரியின் தந்தை சகோதரர்களிடம் ஒரு கோடியே 40 லட்சம் ரூபாய் வாங்கிக்கொண்டு அந்த பணத்தை கார்த்திக்அவருடைய நண்பர்கள் பெயர்களில் சாப்ட்வேர் கம்பெனியும் நிலத்தையும் வாங்கிக் கொண்டு புவனே ஸ்வரியை கொலை செய்யும் நோக்கோடு தாக்கிதுரத்தியுள்ளனர். தற்போது புவனேஸ்வரி இரண்டு குழந்தைகளுடன் தனது, அடிப்படை ஜீவனத்திற்கு கூட வழியின்றி சிரமப்பட்டு வருகிறார். தன்னை ஏமாற்றி 80 1/2 பவுன் நகைகளையும், ஒரு கோடியை 40 லட்ச ரூபாயையும் வாங்கிக் கொண்டு நம்பிக்கை துரோகம், மோசடி, செய்து வன்கொடுமை செய்த மேற்படி கார்த்திகேயன், குமரவேல் ஹக்கீம், சாரதா, ரேணுகா, அவரின் கணவர் மீராசு, ஆகியோர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் மோசடிச் சொத்துக்களை கைப்பற்றி கொடுக்க வேண்டும் என்று கோவை வடவள்ளி காவல் நிலையத்தில் கடந்த 15/9/2016 அன்று புகார் கொடுக்கப்பட்டது. நடவடிக்கை இல்லாததால் மக்கள் சமூக நீதிப் பேரவை சார்பாக பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நீதி கோரி வரும் 10ம் தேதி, கோவையில் விழிப்புணர்வு ஆர்ப்பாட்டத்தை நடத்த திட்டமிட்டுள்ளனர். இந்நிலையில் நேற்று வடவள்ளி காவல் நிலையத்தில் விசாரணை செய்த போது காவல்துறை ஆய்வாளர் சுமதி ஒருதலைபட்சமாக விசாரணை நடத்தியதாலும் புகார் தரப்பில் பேசுவதை அவர்கள் அனுமதியின்றி வீடியோ செய்ததை எதிர் தரப்பினர்களுக்கு அவை பார்வேர்ட் செய்த நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் காவல்துறை உயர் அதிகாரிகளிடம் முறையிட்டதோடு வடவள்ளி காவல் நிலையத்தின் முன்பும் ரேஸ்கோர்ஸ் காவல்துறை உதவி ஆணையாளர் அலுவலகம் முன்பும் பெண்கள் திரளாக கூடி பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நீதி வழங்கவும் பாதுகாப்பு வழங்கவும் கோரிக்கை வைத்தனர். தமிழக முதல்வர் பாதிக்கப்பட்ட கோவையைச் சேர்ந்த அப்பாவி பெண்ணுக்கு நீதி வழங்கும் வகையில் உடனே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வன்கொடுமை செய்து, மோசடி செய்த கும்பலை கைது செய்ய உத்தரவுமாறு தெரிவித்தனர்.

## தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் கோரிக்கையை ஏற்று காலை உணவு திட்ட கண்காணிப்பு ஆசிரியர் காலை 7.00 மணிக்கு வருகை தரவேண்டும் என்ற உத்தரவு ரத்து



அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களின் ஏழ்மைநிலையை கருத்தில் கொண்டு ஏற்கனவே 2022 ஆம் ஆண்டு 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரையிலான மாணவ மாணவிகளுக்கான காலை உணவு திட்டம் தொடங்கப்பட்டு தொடந்து செயல்பட்டு வந்தநிலையில் தற்போது 6.7 மற்றும் 8 ஆம் வகுப்பு மாணவர்களும் பயன்பெறும் வகையில் விரிவாக்கம் செய்யப்பட்டு பெருந்தலைவர் காமராசர் காலை உணவு திட்டத்தை சென்ற மாதம் 22ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு ச.ஜோசப் விஜய் அவர்கள் தொடங்கிவைத்தார் இதனை தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது இதனை கண்காணிக்க செயல்முறைகள் வகுக்கப்பட்டு பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர் ஒருவர் சுயற்சி முறையில் கண்காணிக்க தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது காலை 8.30 முதல் 8.50 வரை மாணவர்களுக்கு உணவு பரிமாறப்பட்டு வழங்க வேண்டும் என்றும் அதற்கு முன்னர் கண்காணிப்பு ஆசிரியர் காலை உணவை சாப்பிட்டு சரிபார்த்த பின்னரே மாணவர்களுக்கு வழங்கவேண்டும்என்று செயல்முறைகள் குறிப்பிடபப்பட்டிருந்தது ஒரு சில மாவட்டங்களில் தவறாக புரிந்துக் கொண்டு கண்காணிப்பு ஆசிரியர்கள் காலை 7.00 மணிக்கே கண்காணிப்பு பணிக்கு வர வேண்டும் என்று வாய்மொழியாகவும் சுற்றறிக்கையாகவும் உத்தரவு பிறப்பித்தனர் உத்தரவை ரத்து செய்து ஏற்கனவே 8.20 மணிக்கு கண்காணிப்பு ஆசிரியர் வருகை தர அனுமதிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் அவர்கள் ஊடகம் மற்றும் பத்திரிகை வாயிலாக அறிக்கையின் மூலம் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு ஆ.ராஜ்மோகன் அவர்களுக்கும்,மதிப்புமிகு பள்ளிக்கல்வி செயலாளர் அவர்களுக்கும், மதிப்புமிகு பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் அவர்களுக்கும்,தொடக்கக்கல்வித்துறை இயக்குநர் அவர்களுக்கும் கோரிக்கை வைத்தார் இந்தநிலையில் மதிப்புமிகு பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் அவர்களின் அறிவுறுத்தல் படி இணை இயக்குநர் மதிப்புமிகுஎஸ்.ஜெயக்குமார் அவர்கள் அலைபேசியில் தொடர்புக் கொண்டு எந்த மாவட்டத்தில் காலை 7.00 மணிக்கு ஆசிரியர்களை பள்ளிக்கு கண்காணிக்க வர அறிவுறுத்த பட்டியிருக்கிறார்கள் என கேட்டார் எதற்காக 7.00 மணிக்கு வர வேண்டும் இயக்குநர் செயல்முறையில் எப்படி ஏதும் குறிப்பிட வில்லையே என்றார் அதன் பின்னர் திருவள்ளூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மதிப்புமிகு ஆர். அறிவழகன் அவர்கள் தொடர்புக் கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரத்தை குறிப்பிட்டு சொல்லவில் கண்காணிப்பு ஆசிரியர் மாணவர்கள் சாப்பிடுவதற்கு முன்னர் சாப்பிட்டு பார்த்து மாணவர்களுக்கு பரிமாற வேண்டும் என தெரிவித்தார் இனி கண்காணிப்பு ஆசிரியர் காலை 8.20 வருகை தந்து தான் முதலில் வந்து பின்பு மாணவர்களுக்கு பரிமாற வேண்டும் என தெரிவித்தார்

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் கோரிக்கையை ஏற்று திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மதிப்புமிகு ச.கவிதா அவர்களின் அறிவுறுத்தலின்படி திருவள்ளூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மதிப்புமிகு ஆர். அறிவழகன் அவர்கள் ஏற்கனவே பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் தொடக்கல்வி இயக்குநர் செயல்முறைபடி கண்காணிப்பு ஆசிரியர்கள் 8.30 மணிக்கு முன்பாக வருகைந்து மாணவர்கள் வருகைக்கு ஏற்ப மாணவர்களுக்கு காலை உணவை கவனத்துடன் வழங்கினால் போதுமானது என தெரிவித்து ஆசியர்களின் சிரமத்திற்கு முற்றுப்புள்ளி வைத்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மதிப்புமிகு ஆர்.அறிவழகன் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்

சா.அருணன்
நிறுவனத் தலைவர்
தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டைப்பு

## உப்பு உற்பத்தி அதிகரித்து விலை சரிந்தது... உற்பத்தியாளர்கள் வேதனை



நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் சுற்று வட்டார பகுதிகளில் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் உப்பு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இதில் 10ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உப்பை உற்பத்தி செய்து வருகின்றனர். இந்த நிலையில் தற்போது வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளதால் வேதாரண்யத்தில் 300 டன் வரை உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. இதுவரை 10 லட்சம் டன் உப்பு உற்பத்தி செய்யப்பட்டுபல்வேறு இடங்களில் குவித்து வைக்கப்பட்டுள்ளன. வியாபாரிகள் உப்பை அதற்கு தகுந்த விலைக்கு கேட்காமல் ஒரு கிலோ 60 பைசாக்கு கேட்பதால் உற்பத்தியாளர்கள் வேதனை அடைந்துள்ளனர். மின்சார கட்டணம் தொழிலாளர்கள் சம்பளம் என பிற இதர செலவுகளுக்காக உப்புக்கு குறைந்தபட்சம் ஒரு ரூபாய் கிடைத்தால்தான் ஈடுகட்ட முடியும். குறைந்த விலைக்கு விற்பனைசெய்தால்செலவை ஈடுகட்ட முடியாத சூழல் ஏற்படும் என உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். உப்பு உற்பத்தி அதிகமாக உள்ளதால் வியாபாரிகள் குறைந்த விலைக்கேஉப்பைவாங்குவதற்கு முன்வருகின்றனர். இதனால் மின்சார கட்டணம் கட்டுவதா? தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்குவதா? எனும் சிக்கலான சூழ்நிலை ஏற்படுவதாக உற்பத்தியாளர்கள் கவலை அடைந்துள்ளனர். இதன் காரணமாக பல்வேறு உற்பத்தியாளர்கள் பணிகளை நிறுத்த தொடங்கியுள்ளனர். இந்த நிலை தொடர்ந்தால் உப்பு உற்பத்தி பெருமளவில் பாதிக்கப்படும் என தெரிகிறது.

## வாலாஜாவில் இந்து மக்கள் கட்சி சார்பில் வீடு வீடாக நோட்டீஸ் விநியோகம் சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை, விஜயதசமியை பாரம்பரிய முறைப்படி கொண்டாட வலியுறுத்தல்



ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டை நகரில், வரவிருக்கும் சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை மற்றும் விஜயதசமி விழாக்களை இந்துக்கள் தங்களது பாரம்பரிய முறைப்படி கொண்டாட வேண்டும் என்பதை வலியுறுத்தி, இந்து மக்கள் கட்சி சார்பில்வீடுவீடாகநோட்டீஸ் வழங்கி வாழ்த்து தெரிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்து மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் தமிழ் திரு. அர்ஜுன் சம்பத் அவர்களின் ஆணைப்படியும், சமூக ஊடகப் பிரிவு மாநிலத் தலைவர் ஜே. கண்ணன் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், வேலூர் கோட்டத் தலைவர் எஸ்.கே. மோகன் தலைமையில் இன்று காலை 10 மணியளவில்வாலாஜாபேட்டை பகுதியில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. இதையடுத்து, வாலாஜா ஒன்றியம், நகரம், பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளுக்கு உட்பட்ட கிராமங்களில் பொதுமக்களை நேரில் சந்தித்து, விழாக்களின் சிறப்பை எடுத்துரைக்கும் வகையில் நோட்டீஸ்கள் வழங்கப்பட்டன. மேலும், ஒவ்வொரு வீட்டிற்கும் நேரில் சென்று விழா வாழ்த்துகளும் தெரிவிக்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் ஆன்மீகப் பிரிவு மாவட்டத் தலைவர் ஸ்ரீதர், மாவட்ட பொருளாளர் சம்பத், மாவட்ட செயலாளர் பார்த்திபன், வாலாஜா ஒன்றிய செயலாளர் மணிவண்ணன், வாலாஜா ஒன்றிய பொறுப்பாளர் பரத், வாலாஜா நகர பொறுப்பாளர் ரவி உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நிர்வாகிகளுக்கு நோட்டீஸ்கள் பிரித்து வழங்கப்பட்டு, அவர்கள் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று வீடு வீடாக பொதுமக்களை சந்தித்து விழா வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

## ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம், விலங்கியல் துறை மற்றும் தமிழ்நாடு வனத்துறை, தென்காசி மாவட்டம் இணைந்து வனவிலங்கு வார விழா – 2026



இந்நிகழ்வில் விலங்கியல் துறை இணைப் பேராசிரியரும் துறைத் தலைவருமான முனைவர்.வசந்தி வரவேற்புரை வழங்கி, சிறப்பு விருந்தினர்கள், வனத்துறை அலுவலர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவிகளை அன்புடன் வரவேற்றார்.

கல்லூரி முதல்வர் முனைவர் மகாலட்சுமி தலைமை உரையாற்றினார். நிகழ்ச்சியில் தென்காசி மாவட்ட உதவி வனப் பாதுகாவலர் திரு. நெல்லைநாயகம் சிறப்பிக்கப்பட்டார்.

அகஸ்தியமலை சமூகப் பாதுகாப்பு மையம் (ACCC), ATREE, மணிமுத்தாறு நிறுவனத்தின் மூத்த ஆராய்ச்சி இணை மற்றும் ஒருங்கிணைப்பாளர் திரு. மதிவாணன் சிறப்பு வளவாளராகக் கலந்து கொண்டு, "பகிரப்படும் நிலப்பரப்புகள்: மனிதர்கள்–வனவிலங்குகள் இணைந்து வாழ்வதற்கான எதிர்காலம்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

மனிதர்களின் செயல்பாடுகள் அதிகரித்து வருவதால் வனவிலங்குகளின் இயற்கைவாழிடங்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே, வனவிலங்குகளைப் பாதுகாப்பதுடன், அவற்றுடன் பாதுகாப்பாகவும் இணக்கமாகவும் வாழ்வதன் அவசியம் குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், வனவிலங்கு வார விழாவின் ஒரு பகுதியாக மாணவர்களுக்குப் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் பங்கேற்ற அனைத்து மாணவிகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வுகள் மூலம் மாணவர்களிடையே வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் விலங்கியல் துறை பேராசிரியர்கள், வனத்துறை அலுவலர்கள், மற்றும் மாணவிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை துறைத்தலைவர் முனைவர் . வசந்தி தலைமையில், விலங்கியல்துறை மற்றும் வனத்துறை ஒருங்கிணைப்புக் குழுவினர் சிறப்பாக மேற்கொண்டனர்.

நிகழ்ச்சியின் நிறைவாக விலங்கில் துறை இணைப் பேராசிரியர் முனைவர் இசக்கியம்மாள் நன்றியுரைவழங்கி, நிகழ்வை சிறப்பாக நடத்துவதற்கு ஒத்துழைத்த கல்லூரி நிர்வாகம், வனத்துறை அலுவலர்கள், சிறப்பு வளவாளர், பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

"வனவிலங்குகளைப் பாதுகாப்போம்; இயற்கையைப் பாதுகாப்போம்; நமது எதிர்காலத்தைப் பாதுகாப்போம்" என்ற விழிப்புணர்வு செய்தியுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

## தூத்துக்குடியில் பாஜக சார்பில் 'சேவா ஜோதி' தீபம் ஏந்தி பாஜக நிர்வாகிகள் பேரணி



பிரதமர் நரேந்திர மோடியின் 25 ஆண்டு கால பொதுவாழ்க்கைப் பயணத்தை நினைவு கூரும் வகையில், பாரதிய ஜனதா கட்சி சார்பில் நாடு முழுவதும் 'சேவா ஜோதி' பேரணி நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக தூத்துக்குடியில் பாஜக சார்பில் 'சேவா ஜோதி' பேரணி எழுச்சியுடன் நடைபெற்றது. இளைஞர் அணி மாவட்டத் தலைவர் சக்திவேல் 'சேவா ஜோதி' தீபத்தை ஏந்தியபடி பேரணியை முன்னெடுத்துச் சென்றார். இதில் கலந்து கொண்ட நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் தேசியக்கொடிகள் மற்றும் பாஜககொடிகளைகைகளில் ஏந்திச் சென்றனர். மேலும், பிரதமர் நரேந்திர மோடியின் பொதுவாழ்க்கைப் பயணத்தையும் சாதனைகளையும் விளக்கும் பதாகைகள் பேரணியில் இடம்பெற்றன. பிரதமர் நரேந்திர மோடியின் 25 ஆண்டு கால மக்கள் சேவையைப் போற்றும் வகையிலும், சமூகம் மற்றும் மக்கள் நலன் சார்ந்த சேவைக் கருத்துகளைப் பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் நோக்கத்துடனும் இந்தப் பேரணி நடத்தப்பட்டதாக பாஜகநிர்வாகிகள் தெரிவித்தனர்.

இந்தியாவின் 100-வது சுதந்திர ஆண்டான 2047-க்குள் நாட்டை முழுமையாக வளர்ச்சியடைந்த பாரதமாக மாற்றுவதற்கான முயற்சிகளில் பொதுமக்கள் அனைவரும் தங்கள் பங்களிப்பை வழங்க வேண்டும் என்ற கருத்தும் பேரணியின் போது வலியுறுத்தப்பட்டது.

இந்தப் பேரணியில் பாஜக தேசியச் செயலாளர் மா. வெங்கடேசன், மீனவர் அணி மாநிலத் தலைவர் சீமா பாலு, தூத்துக்குடி தெற்கு மாவட்டத் தலைவர் சித்ராங்கதன், வடக்கு மாவட்டத் தலைவர் சரவண கிருஷ்ணன், மாவட்டப் பொதுச் செயலாளர்கள் ஏ.எம். ராஜேஷ், ஆறுமுகம், செல்வராஜ், மாவட்டத் துணைத் தலைவர்கள் சிவராமன்,இசக்கிமுத்து, காளிராஜா, மாசானம், சண்முகசுந்தரம், வடக்கு மாவட்டப் பொதுச் செயலாளர் வீரா உள்ளிட்ட பல்வேறு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் திரளான கட்சித் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம், ஹோட்டல் ராயல் எம்பேஸியில் மாவட்ட தொழில் மையம் மற்றும் இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆ/ப் பேக்கேஜிங் நிறுவனம் இணைந்து நடத்திய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தேவையான சுற்றுச்சூழலுக்கு உகந்த பேக்கேஜிங் தொடர்பான கருத்தரங்கு நிகழ்ச்சியில் அமைக்கப்பட்டிருந்த கருத்துக்காட்சி அரங்குகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (07.10.2026) பார்வையிட்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், பொது மேலாளர் (மாவட்ட தொழில் மையம்) கு.திருமுருகன் உட்பட பலர் உள்ளனர்.

## மேட்டூர் அருகே 3 மாதங்களாக கால்நடைகளை வேட்டையாடிய சிறுத்தை சிக்கியது: மக்கள் நிம்மதி



மேட்டூர்: மேட்டூர் அருகே கடந்த 3 மாதங்களாக கால்நடைகளை வேட்டையாடி வந்த சிறுத்தை, வனத்துறையினர் வைத்த கூண்டில் சிக்கியது. இதனால் கிராம மக்கள் நிம்மதியடைந்தனர்.

மேட்டூர் அருகே கண்ணாமூச்சி கிராமத்தில் விவசாயிகள் பலர் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த 3 மாதங்களாக கண்ணாமூச்சியை ஒட்டியுள்ள வனப்பகுதியில் இருந்து வெளியேறும் சிறுத்தை விவசாயிகள் வளர்ந்து வரும் கால்நடைகளை வேட்டையாடி வந்தது.இதனால்பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் வீட்டை விட்டு வெளியே வரமுடியாமல் அச்சமடைந்தனர். இதுவரை சிறுத்தை தாக்குதலில் சுமார் 20 ஆடுகள், 2 மாட்டுக் கன்றுகள், 3 வளர்ப்பு நாய்கள் மற்றும் 15 வளர்ப்பு கோழிகள் உள்ளிட்ட கால்நடைகளை வேட்டையாடியது.

இதனிடையே, சிறுத்தையை பிடிக்கும் நடவடிக்கையில் மேட்டூர் வனச்சரக அலுவலர் செங்கோட்டையன் தலைமையிலான வனத்துறையினர் தீவிர கண்காணிப்பு மற்றும் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து, மேட்டூர் வனச்சரகத்திற்கு உட்பட்ட மிளகாய்பொதை, காவலாண்டியூர், நஞ்சுண்டபுரம், செட்டியூர், நெடுஞ்செழியன் நகர் மற்றும் மூலக்கடை மஞ்சமெத்தை ஆகிய 5 இடங்களில் சிறுத்தையைப் பிடிக்க கூண்டுகள் மற்றும் கண்காணிப்பு கேமரா அமைத்தனர். அதேபோல், ஈரோடு மாவட்டம் குருவரெட்டியூர் பகுதியிலும் சிறுத்தை நடமாட்டம் இருந்ததால், அம்மாவட்டத்தின் சென்னம்பட்டி வனச்சரகத்திற்கு உட்பட்ட மசக்கவுண்டனூரிலும் ஒரு கூண்டு அமைக்கப்பட்டது.

சேலம் மாவட்டம் டேனிஷ்பேட்டையில் இருந்து இரண்டு கூண்டுகளும்,ஓசூரில்இருந்து ஒரு கூண்டும், பாலக்கோட்டில் இருந்து ஒரு கூண்டும் மற்றும் சத்தியமங்கலத்தில் இருந்து ஒரு கூண்டு என மொத்தம் 5 கூண்டுகள் வைக்கப்பட்டன. கூண்டில் ஆட்டை கட்டி வைத்து சிறுத்தையை பிடிப்பதற்கான பணியில் சேலம் மற்றும் ஈரோடு மாவட்ட வனத்துறையினர் ஈடுபட்டனர். இதனிடையே, கண்ணாமூச்சியை அடுத்த மிளகாய்பொதை பகுதியில்ஆட்டைகட்டிவைத்த கூண்டில் சிறுத்தை நேற்றிரவு சிக்கியது.

இதையடுத்து, இன்று காலைகூண்டில்இருந்து சத்தம் கேட்ட நிலையில் வனத்துறையினர் வந்து பார்க்கும் போது, சிறுத்தை கூண்டில் சிக்கியது தெரியவந்தது.

இதுகுறித்து மேட்டூர் வனத்துறையினர் உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து மாவட்ட வன அலுவலர் அம்புல்கர் யஷ்வந் ஜெகதீஸ் சம்பவ இடத்திற்கு வந்து கூண்டில் பிடிப்பட்ட சிறுத்தையை பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து, கால்நடை மருத்துவர் மூலம் மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு அடர்ந்த வனப்பகுதியில் விட நடவடிக்கை எடுத்தனர். சிறுத்தை சிக்கியதையடுத்து அப்பகுதி மக்கள் சிறுத்தை பார்க்க குவிந்து வருகின்றனர். மேலும், 3 மாதங்களாக வனத்துறையினருக்கு போக்கு காட்டி வந்த சிறுத்தை சிக்கியதால் கிராம மக்கள் நிம்மதியடைந்தனர்.

## காரைக்கால் மீன்பிடி துறைமுக விரிவாக்கத்துக்கு எதிர்ப்பு 300க்கும் மேற்பட்ட மக்கள் சாலை மறியல்



காரைக்கால்: காரைக்கால் மீன்பிடி துறைமுக விரிவாக்கத் திட்டப் பணிக்கு எதிர்ப்புத் தெரிவித்து கருக்களாச்சேரி கிராம மக்கள் சாலை இன்று (அக்.7) சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்

காரைக்காலில் அரசலாறு - முல்லையாறு இணையுமிடத்தில் 2012-ம் ஆண்டு ரூ.47.74 கோடி மதிப்பில் மீன்பிடி துறைமுகம் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. துறைமுகம் அருகே கடலோரத்தில் கருக்களாச்சேரி கிராமம் அமைந்துள்ளது. இந்நிலையில், மீன்பிடி துறைமுகத்தை விரிவாக்கம் செய்து, 130.17 கோடியில் ஸ்மார்ட் மற்றும் ஒருங்கிணைந்த மீன்பிடி துறைமுகதிட்டத்துக்காக மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதையடுத்து,தற்போதைய திட்டத்தின்படி துறைமுகம் விரிவாக்கம் செய்யப்பட்டால் கருக்களாச்சேரி கிராமம் வரை துறைமுகம் வருமென்றும், துறைமுகத்தில் இறக்கப்படும் கசார் என்கிற துர்நாற்றம் வீசக்கூடிய தீவனத்துக்கான மீன்கள் மற்றும் துறைமுகக் கழிவுகளால் மக்கள் வசிக்கும் பகுதியில் கொண்டு வரப்பட்டால் சுகாதாரமான முறையில் வசிக்க முடியாது எனவும் விரிவாக்க திட்டத்துற்கு கருக்களாச்சேரி மக்கள் எதிர்ப்பு தெரிவிக்க தொடங்கினர்.

மேலும், விரிவாக்க திட்டத்தை கருக்களாச்சேரி கிராமம் பாதிக்காத வகையில் 150 மீட்டருக்கு அப்பால் வடக்குப் புறமாக அமைக்க வேண்டும் என கிராமத்தினர் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததோடு, தொடர்ந்து பல நிலைகளில் எதிர்ப்புத் தெரிவித்தும், போராட்டங்களில் ஈடுபட்டும் வந்தனர். மக்கள் எதிர்ப்புகளுக்கிடையே, கடந்த ஆண்டு அக்.11-ம் தேதி புதுடெல்லியில் இருந்து பிரதமர் மோடி காணொலி வாயிலாக துறைமுக விரிவாக்கத் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டி வைத்தார்.

இந்நிலையில், இத்திட்டத்துக்கு அனுமதி அளிக்கக் கூடாது என வலியுறுத்தி கிராம மக்கள் சென்னை பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்தனர். அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், துறைமுகத்தில் பணிகள் தொடங்குவதற்கான ஆயத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் ஆத்திரமடைந்த கிராம மக்கள் விரிவாக்க நடவடிக்கைகளை கண்டித்து, நாகை - சிதம்பரம் தேசிய நெடுஞ்சாலையில், காரைக்கால் அம்மாள்சத்திரம் பகுதியில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோரிக்கை குறித்து போராட்டத்தில் ஈடுபட்டோர் கூறியது: "தற்போதைய திட்டத்தின்படி துறைமுகம் விரிவாக்கம் செய்யப்பட்டால் துறைமுகத்தில் இறக்கப்படும் கசார்என்கிறதுர்நாற்றம் வீசக்கூடிய தீவனத்துக்கான மீன்கள் மற்றும் துறைமுகக் கழிவுகளால் பல்வேறு பாதிப்புகள் ஏற்படும். நாங்கள் சுகாதாரமான முறையில் வசிக்க முடியாது. எங்கள் வாழ்வாதாரம் பாதிக்கும்.



ஈரோடு மாவட்டம், ஹோட்டல் ராயல் எம்பேஸியில் மாவட்ட தொழில் மையம் மற்றும் இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆ/ப் பேக்கேஜிங் நிறுவனம் இணைந்து நடத்திய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தேவையான சுற்றுச்சூழலுக்கு உகந்த பேக்கேஜிங் தொடர்பான கருத்தரங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (07.10.2026) துவக்கி வைத்தார்.உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், பொது மேலாளர் (மாவட்ட தொழில் மையம்) கு.திருமுருகன் உட்பட பலர் உள்ளனர்.

## பட்டயக் கணக்காளரின் சில தவறுகளுக்கு முதல்வர் விஜய் பொறுப்பாக முடியுமா? சென்னை உயர்நீதிமன்றம் கேள்வி



சென்னை: 'முதல்வர் விஜய் தனது சொத்துகளின் பட்டியலை ஆடிட்டரை நம்பி வழங்கியிருப்பார்.அவர்தான் அந்த சொத்துப் பட்டியலை வேட்புமனுவில் தாக்கல் செய்திருப்பார். ஆடிட்டர் சில தவறுகளை செய்திருந்தால் அதற்கு விஜய்யைப் பொறுப்பாக்கி அவர் தேர்தலில் வெற்றி பெற்றது செல்லாது என அறிவிக்க முடியுமா?' என தேர்தல் வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

பெரம்பூர் தொகுதியில் போட்டியிட்ட முதல்வர் விஜய் 53 ஆயிரத்து 715 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இந்நிலையில், முதல்வர் விஜய் தனது வேட்புமனுவில் சொத்துகளை மறைத்துள்ளதாகவும், தவறான தகவல்களை தெரிவித்துள்ளதாகவும் குற்றம் சாட்டி அத்தொகுதி வாக்காளர்களான தினேஷ்,லட்சுமி நரசிம்மன் மற்றும்திமுகவேட்பாளரான ஆர்.டி.சேகர் ஆகியோர் உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்குகளைத் தொடர்ந்துள்ளனர்.

இந்நிலையில், பெரம்பூர் தொகுதி வாக்காளரான தினேஷ் சார்பில் வழக்கறிஞர் வி.ஆர். சண்முகநாதன் தாக்கல் செய்துள்ள பிரமாணப் பத்திரத்தில், 'முதல்வர் விஜய் பெரம்பூர் தொகுதியில் தாக்கல் செய்துள்ள வேட்புமனுவில், கொடைக்கானல் வில்பட்டியில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்துக்கு உரிமையாளர் என சொந்தம் கொண்டாடுகிறார்.

வில்பட்டியில் உள்ள அந்த நிலத்தை 1997-ல் ரூ.30 ஆயிரத்துக்கு விலைக்கு வாங்கியதாக கூறியுள்ளார். அந்த சொத்தின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.20 லட்சம் எனக் கூறியுள்ளார். ஆனால், அ'பதிவேட்டில் அந்த சொத்து அரசு புறம்போக்கு நிலம் என உள்ளது.

நீலாங்கரையில் உள்ள தனது பங்களா வாரிசுரிமை மூலம் பெறப்பட்டுள்ளது என முதல்வர் விஜய் கூறுகிறார். உண்மையில் அந்த சொத்து கடந்த 2005-ம் ஆண்டு தனது தந்தை சந்திரசேகர்பதிவுசெய்துகொடுத்த செட்டில்மென்ட்பத்திரம் மூலம் பெறப்பட்டுள்ளது. 17 ஆயிரத்து 100 சதுர அடி நிலம் மற்றும் 5 ஆயிரத்து 500 சதுர அடி கொண்ட அந்த பங்களாவின் மதிப்பு பத்திரத்தில் ரூ.2.75 கோடி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், விஜய் தனது தேர்தல் வேட்புமனுவில், அந்த நிலத்தில் 18 ஆயிரத்து 633 சதுர அடியில் கட்டுமானம் கட்ட ரூ.18.73 கோடியை செலவிட்டுள்ளதாகவும், தற்போது அந்தபங்களாவின் சந்தை மதிப்பு ரூ.20 கோடி என்றும் தெரிவித்துள்ளார்.

கடந்த 2010-ல் சென்னை போரூரில் சுமார் 34 ஆயிரம் சதுர-அடி பரப்புள்ள விவசாயம் சாரா நிலத்தை ரூ.91.13 கோடிக்கு வாங்கியதாக கூறியுள்ளார். ஆனால் பதிவுத்துறை ஆவணங்களின்படி ரூ.7.5 கோடிக்கு 20 ஆயிரத்து 773 சதுர அடி நிலம் மட்டுமே வாங்கியுள்ளார்.

சென்னை பாடியில் தற்போதைய சந்தை மதிப்பில் ரூ.7 கோடி மதிப்புள்ள 11 ஆயிரத்து 854 சதுர அடி கொண்ட வணிக வளாகம் உள்ள இடத்தை 2009-ல் ரூ.1.95 கோடிக்கு வாங்கியதாகவும், கட்டுமானத்துக்காக ரூ.3.9 கோடியை செலவிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

உண்மையில் 23 ஆயிரத்து 460 சதுர அடி கொண்ட அந்த வணிக வளாகத்தைகடந்தபிப்ரவரி 12 அன்று ரூ.35 கோடிக்கு விஜய் விற்பனை செய்துள்ளார். ரூ.35 கோடிக்கு விற்கப்பட்ட இந்த சொத்தை ரூ.7 கோடி என மதிப்பைக் குறைத்து காண்பித்துள்ளார்.

இதேபோல பண்ருட்டியில் உள்ள ரூ.30கோடி மதிப்புள்ள சொத்தை விஜய் தனது வேட்புமனுவில் தெரிவிக்காமல் மறைத்துள்ளார்.

ஆகவே, திட்டமிட்டு வேண்டுமென்றே சொத்துகளை மறைத்தும்,மதிப்பைகுறைத்தும் வேட்புமனுவில் தவறானதகவல்களைவிஜய் தெரிவித்துள்ளதால் அவர் பெரம்பூர் தொகுதியில் வெற்றி பெற்றது செல்லாது என அறிவிக்க வேண்டும்' எனக் கோரியிருந்தார்.

இந்த வழக்கு விசாரணை, நீதிபதி வி.லட்சுமி நாராயணன் முன்பாக கடந்த 3 நாட்களாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த தேர்தல் வழக்குகளைநிராகரிக்கக்கோரி முதல்வர் விஜய் தரப்பில் மூத்த வழக்கறிஞர் கோபால் சங்கரநாராயணன் ஆஜராகி, 'முதல்வர் விஜய்க்கு எதிரான இந்த குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றவை, கற்பனையானவை, பொய்யானவை, தவறான புரிதல் மற்றும் ஊகங்களின் அடிப்படையிலானவை என்பதால் தேர்தல் வழக்குகளை நிராகரிக்க வேண்டும்' என வாதிட்டார்.

இந்த வழக்கு விசாரணையின்போது நீதிபதி வி.லட்சுமி நாராயணன், "நான் நீதிபதியாகி எனது சொத்துகளை அறிவிக்க வேண்டியநிலைஏற்பட்டபோது எனது பட்டயக் கணக்காளரை நம்பியிருந்தேன். அதேபோல முதல்வர் விஜய்யும் தனது சொத்துகளின் பட்டியலை பட்டயக் கணக்காளரை நம்பி வழங்கியிருப்பார். அவர் தான் அந்தசொத்துப்பட்டியலை வேட்புமனுவில் தாக்கல் செய்திருப்பார். பட்டயக் கணக்காளர் சில தவறுகளை செய்திருந்தால் அதற்கு முதல்வரை பொறுப்பாக்கி அவர் தேர்தலில் வெற்றி பெற்றது செல்லாது என அறிவிக்க முடியுமா?

திரைத்துறையில் முன்னணி ஹீரோவாக வலம்வந்த ஒருவர் ரூ.600 கோடிக்கு மேல் தனக்கு சொத்துகள் உள்ளது என சொத்துப் பட்டியலை வெளியிட்டு இருக்கும்போது ரூ.20 லட்சம் அல்லது ரூ.30 லட்சம் பெறுமானமுள்ள சொத்துகளை மறைத்து விட்டதாக கூறி தேர்தலில் வெற்றியை செல்லாதது ஆக்கிவிடுமா?' என மனுதாரர் தரப்புக்கு கேள்வி எழுப்பினார். நீதிபதி, இந்த வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் பதில் வாதங்களை முன்வைப்ப தற்காக விசாரணையை வியாழக்கிழமை தள்ளி வைத்தார்.

## Google Maps, design flaw or AAPera planning? Barapullah traffic mess triggers blame game



The Phase-III corridor connects Mayur Vihar Phase-I on Noida Link Road with Sarai Kale Khan on Ring Road and was expected to ease congestion significantly.

It hasn't been long since the Barapullah Phase-III flyover was thrown open to the public, but instead of becoming a means to ease congestion, it is in focus over a traffic mess.

While the Delhi Traffic Police and the Public Works Department pointed to multiple factors behind the congestion, BJP minister Parvesh Verma blamed the previous Aam Aadmi Party (AAP) government for the project's design and planning.

The figer-pointing has also turned to Google Maps. The traffic police and PWD officials allege that the navigation platform hasn't been reflecting real-time congestion, leading more commuters to the already-busy route.

"Cause: Congestion on Barapulla Phase-III is not being reflected on Google Maps, due to which commuters are continuing to use this route. This has resulted in heavy traffic and a bottleneck at Barapulla Junction," the Delhi traffic police said on Wednesday.

The Delhi Traffic Police on Monday said the primary reason for the congestion was a structural bottleneck on the Old Barapullah Flyover. On X, the department said: "Main cause of traffic jam after opening of Barapullah Phase-III is structural bottleneck at Old Barapullah Flyover."

The post was later deleted.

Joint commissioner of police (traffic) Sanjay Tyagi told HT that the post was taken down "just to verify the facts." He said an aerial survey on October 1 identified the abrupt merger of the new flyover with the existing Barapullah corridor near the Sundial as a bottleneck.

"Following our aerial survey on October 1, we had already pointed out that the abrupt merger of traffic of the new flyover with the existing Barapullah corridor near the Sundial is leading to the formation of a bottleneck and that there is a significant mismatch in lane capacity at the merging point, with multiple streams of traffic converging towards the existing Barapullah flyover, which has competitively limited lane capacity," Tyagi told HT.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.